# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## OS.No.112/2024

dated : 17.02.2026

D.W.1

Name உத்தமன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

10 ம் பிரதிவாதி என் சகோதரர் ஆவார். வழக்குரை சொத்தின் புல எண் ஞாபகம் இல்லை. என்னுடைய சொத்தின் புல எண்ணும் ஞாபகமில்லை. என் சொத்து சுப்பிரமணியன் என்பவருக்கு பாத்தியப்பட்டது. அவர் வாதியின் தந்தை ஆவார். மேற்படி சுப்பிரமணியனுக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்ட சொத்தாகும். மேற்படி சுப்பிரமணியன் செலுத்திய கிரையத் தொகை சுயசம்பாத்தியத்தில் செலுத்தப்பட்ட தொகையா? பூர்விக சொத்தில் கிடைத்த பணத்தைக கொண்டு செலுத்தப்பட்ட தொகையா? என்று நேரில் தெரியாது. மேற்படி சுப்பிரமணியன் வழக்குச் சொத்தை கிரையம் பெறும் முன்பு அவருக்கு வேறு சில சொத்துக்கள் இருந்ததா? இல்லையா? என்றும் தெரியாது. என் தாயாருக்கு கிரையம் செய்து கொடுப்பதற்காக சுப்பிரமணியன் பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்தார். கிரைய ஆவணம் எழுதிப் பெறுவதற்கு முத்திரைதாள் கட்டணம் செலுத்துவதற்கு வசதியில்லை என்பதால் அதிகார ஆவணமாக எழுதிப் பெற்றார். ரூ.55000/-க்கு எழுதிப் பெற்றார். என்

தாயாருக்கு அது சீட்டு செலுத்திய தொகையில் சேமித்து வைத்திருந்த தொகையாகும். நாங்கள் யாரும் எங்கள் தாயாருக்கு பணம் கொடுக்கவில்லை. பணப்பற்று இரசீதில் சுப்பிரமணியின் மகன் கையெழுத்திட்டுள்ளார். அவர்தான் 1ம் பிரதிவாதி ஆவார். அந்த இரசீது பதிவு செய்யப்பட்டதாகும். 3.9 செண்ட் நிலத்திற்கு அதிகார ஆவணம் பெறப்பட்டிருந்தது. சுப்பிரமணியன் 2011ம் ஆண்டு இறந்துபோனார். சுப்பிரமணியன் உயிருடன் இருக்கும் வரை மேற்படி அதிகார ஆவணத்தை பயன்படுத்தி என் தாயார் யாருக்கும் கிரையம் செய்து கொடுக்கவில்லை அதற்கு குறிப்பிட்ட காரணம் ஏதும் உண்டா என்றால் இல்லை. என் தாயார் பெயரிலும் பத்திரம் எழுதி பெற்றுக் கொள்ளவில்லை. பி.வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணம் என் தாயாரால் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. சுப்பிரமணியனின் வாரிசுதாரரிடம் நான் கிரையம் பெறும் முன்பாக சுப்பிரமணியின் வாரிசுகளிடம் நான் ஏதும் விசாரித்துக் கொள்ளவில்லை. சுப்பிரமணி 1ம் பிரதிவாதிக்கு உயில் ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார் எந்த தேதியில் எழுதிக் கொடுத்தார் என்று ஞாபகமில்லை. வழக்கிற்கு பின்னர் எனக்கு எழுதிக் கொடுத்த நபரிடம் இவ்வழக்கு பற்றி நான் கேட்டேன். ஆனால் அவர் எழுதிக் கொடுத்த கிரையம் சரியானதுதான் என்றும் வழக்கு தவறாக போடப்பட்டுள்ளது என்றும் கூறினார். 2019ம் ஆண்டு எனக்கு 1ம் பிரதிவாதி கிரையம் கொடுத்தார். என் சகோதரர்களுக்கு 2017ம் ஆண்டு கிரையம் கொடுத்துள்ளார். அந்த ஆவணத்தில் சுப்பிரமணியின் குடும்ப உறுப்பினர்கள் சாட்சியாக கையெழுத்திடவில்லை. அந்த

ஆவணத்தில் சுப்பிரமணியனின் சுயார்ஜித சொத்து என்று கூறப்பட்டுள்ளது. நான் கிரையம் பெற்ற ஆவணத்தில் என்னுடைய கிரையதாரருக்கு வாய்மொழியாக பாகம் கிடைத்த சொத்து என்று கூறப்பட்டுள்ளது. வாய் மொழி பாகப்பிரிவினையில் யார் யார் ஈடுபட்டனர் யார் யாருக்கு என்னென்ன பாகங்கள் ஒதுக்கப்பட்டன என்று எனது வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான். 10, 11 பிரதிவாதிகளுக்கு 2017 மற்றும் 2019 ம் ஆண்டு கிரையம் எழுதிக் கொடுத்த போது 2005 ம் ஆண்டு ஏற்பட்ட உயில் படி பாத்தியப்பட்ட சொத்து என்று கூறவில்லை என்றால் சரிதான். சுப்பிரமணியின் உயிலை நான் படித்துப் பார்க்கவில்லை. சுப்பிரமணியன் எழுதி வைத்ததாக கூறப்படும் உயில் என்னுடைய கிரையத்திற்கு முந்தைய ஆவணமா? பிந்தைய ஆவணமா ? என்று எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி உயில் ஆவணத்தை ஒப்புக் கொண்டுள்ளார் என்றும் ஆனால் வாதிகளுக்கு அவர்கள் கோரும் பரிகாரம் கிடைக்கக்கூடாது என்பதற்காகவே உயில் ஆவணம் பற்றி தெரியாது என்றும் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு பங்கு கொடுக்கக்கூடாது என்பதற்காகவே 2005 ம் ஆண்டு உயில் எழுதி வைத்ததாக கூறி அதை 2021ம் ஆண்டு பதிவு செய்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதியுடன் கூட்டுச் சேர்ந்து வாதிக்கு பங்கு கொடுக்கக்கூடாது என்பதற்காகவே ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற சொத்துக்கள் உட்பட வழக்குரை சொத்துகள் நாளது தேதிவரை பாகப்பிரிவினை செய்யப்படவில்லை என்றும் பிரிவினை செய்யப்படாத சொத்தை பொறுத்து நான்

செய்துள்ள கிரையம் வாதியை கட்டுப்படுத்தக்கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் கூறிப்பிடும் பொது அதிகார ஆவணத்தில் உள்ள கையொப்பத்திற்கும், இரசீதில் உள்ள சுப்பிரமணியின் கையொப்பத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.3 ஆவணம் பதிவு செய்யப்படவில்லை என்றும் கையெழுத்து வேறுபாடு உள்ளது என்பதாலேயே அது பதிவு செய்யப்படாமலேயே தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணத்தில் 1ம் பிரதிவாதி தவிர மற்ற வாரிசுகள் எவரும் சாட்சி கையெழுத்திடவில்லை என்றால் சரியல்ல. மற்றொரு சாட்சி சண்முகம் சுப்பிரமணியனின் பக்கத்து வீட்டுக்காரர். மேற்படி ஆவணத்தில் உள்ள மற்றொரு சாட்சி சண்முகம் சுப்பிரமணியனை பற்றி சாட்சியமளிக்க முன்வருவரா என்றால் இல்லை அவர் இறந்துபோனார். அவர் எந்த ஆண்டு இறந்தார் என்று எனக்கு தெரியாது. அதிகார ஆவணம் மற்றும் பணப்பற்று இரசீதில் கையெழுத்து வேறுபாடு உள்ளது என்றும் நான் வேண்டுமென்றே அதை மறுக்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பாகப்பிரிவினை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. நான் மோசடியாக பெற்ற கிரைய ஆவணத்தின் அடிப்படையில் ஏற்பட்ட சொத்து வரி இரசீது, மற்றும் மின் கட்டண இரசீதுகள் வாதியின் உரிமையை கட்டுப்படுத்தக்கூடியது என்றால் சரியல்ல. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல.

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.02.17 17:48:30 +0530